பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 03 திங்கட்கிழமை 20.10.2025 கதிர் 344

## இனி இது ரகசியம் அல்ல!

தெற்கில் இஷாரா செவ்வந்தியின் கைதுக்குஅடுத்தபடிகடந்தவாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டவிடயம் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் சட்டத்தரணி ஒருவரை

☞ 2

## அரச மதுவரிப் பணியாளர்களில் 25 வீதமானோர் மோசடியாளர்கள்

### திணைக்கள ஆணையாளரே வாக்குமூலம்

அரசமதுவரிபணியாளர்களில்20முதல் 30 சதவீதமானோர் மோசடியாளர்கள். ஆனால்இப்போதுநிலமைமாறிவிட்டது. ஆகவே பழைய பழக்கத்தை அவர்கள் மாற்றிக்கொள்ளவேண்டும்எனஇலங்கை மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் பிரேமரத்ன தெரிவித்தார்.

அகில இலங்கை மதுவரிப் பணியாளர்கள் சங்கத்தின் 74ஆவது வருடாந்த மாநாடு சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின்தேசிய பொருளாதாரத்தில் மதுவரி திணைக்களம் முக்கிய பங்கு வகிக்கிறது. அரச வருமானத்தை ஈட்டித்தரும் துறைகளில் மதுவரித் திணைக்களம் முதன்மையானதாகக் காணப்படுகிறது.

நடப்பாண்டில் 242 மில்லியன் ரூபாய் என்ற இலாப இலக்கினை அடைந்துள்ளோம். இந்த இலாபத்தை மேலும் எம்மால் அதிகரித்துக்கொள்ள முடியும்.

சட்டவிரோதமதுபானஉற்பத்திகளை தடுப்பது மற்றும் அனுமதிப்பெற்ற மதுபான நிலையங்களிடமிருந்து வரிகளை பெறுவது திணைக்களத்தின் முதன்மைப் பணி.

மதுவரிப் பணியாளர்களில் 20 முதல் 30 சதவீதமானோர் மோசடியாளர்கள் என்பதை குறிப்பிடவேண்டும்.கடந்த காலங்களில் எவ்வாறு செயற்பட்டார்களோ அவ்வாறே தற்போதும் செயற்படுகிறார்கள். நிலைமை மாறிவிட்டது. ஆகவே பழைய பழக்கத்தை திருத்திக்கொள்ளுங்கள். சட்டத்துக்கு அமைய சிறந்த முறையில் செயற்படுங்கள் என்று குறிப்பிட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## கட்சி அரசியல் மறைந்து வருகின்கிறது தனிநபரைச் சுற்றியே இனி அரசியல்

### ரணில் விக்கிரமசிங்க ஆரூடம்

இலங்கையின் அரசியல் போக்கு வெகுவாக மாற்றமடைந்து வருவதுடன், இதுவரைக்காலமும் காணப்பட்ட கட்சி அரசியல் மறைந்து தனிநபர்களின் ஆளுமை மற்றும் செல்வாக்கைச் சுற்றியே அரசியல் சூழல் மையங்கொள்கிறது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. இலங்கையில் மட்டுமின்றி உலக நாடுகள் பலவற்றிலும் இதே போக்கே காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால அரசியல் போக்கு குறித்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரான வருண ராஜபக்ச மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க உள்ளிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையடல் ஒன்றின் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக நாட்டிற்கு எதிர்க்கட்சியின் செயல்திறன் மிகவும் முக்கியமானது. ஆனால் எதிர்காலத்தில் கட்சி அரசியல் தோல்வியடைந்து, தனிநபர்களைச் சுற்றியே அரசியல் தீர்மானிக்கப்படும். இருப்பினும் நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் செயல்பாடுகள் மிக முக்கியம் என்பதை உணரவேண்டும். ஆனால் இன்று எதிர்க்கட்சி பலவீனமாகவே உள்ளது. எதிர்க்கட்சியாக பரந்துபட்டுச் செயல்படாமல், சில நபர்கள் மட்டுமே எதிர்க்கட்சியாகச் செயல்படுகின்றனர். உதாரணமாக சாமர சம்பத், தயாசிறி ஜயசேகர போன்றவர்கள் உள்ளனர்.

உத்தேச பொதுக் கூட்டணியின் தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறது. இதற்கு நான் இணங்கமாட்டேன் என்று கருதுகின்றனர். அவ்வாறில்லை. ஆவர்களின் கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டால், கூட்டணியின் எதிர்காலம்

☞ 2

# இன, மத வாத சக்திகளைத் தோற்கடித்து சமூக நீதியை நிலைநாட்டி பாதுகாப்போம்

## தீபாவளிச் செய்தியில் அரசுத் தலைவர் தெரிவிப்பு

அனைத்து மதவாத மற்றும் இனவாத சக்திகளையும்தோற்கடித்துசமூகநீதியை நிலைநாட்டி அனைவரின் சுதந்திரமும் கண்ணியமும் பாதுகாக்கப்படும் ஒரு பாதுகாப்பானநாட்டைக்கட்டியெழுப்பவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என்று அரசுத் தலைவர் அநுரகுமார தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகெங்கிலும் வாழும் இந்து பக்தர்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது. கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவு கூர்ந்து, அதர்மத்தை

☞ 2

## ‘செம்மணி’ பற்றி உண்மைகளை பகிரத் தயார்’ சோமரத்னவின் சத்தியக் கடதாசி ஐ.நா.விடம்

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கு குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச, செம்மணிப் புதைகுழி குறித்து எந்த நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கத் தயார் என்று வழங்கியுள்ளசத்தியக்கடதாசிஐ.நா.வின்ஆதாரங்கள் சேகரிப்புச்செயற்றிட்டத்திடம்கையளிக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட சகல போர்க்குற்றங்கள் தொடர்பிலும் உள்நாட்டு நீதிமன்றத்திலோ அல்லது சர்வதேச நீதிமன்றத்திலோ அல்லது ஏதேனும் அமைப்புக்கள் முன்னிலையிலோ சாட்சியம் அளிப்பதற்குத்

☞ 2

## தேசிய தீபாவளி ஹட்டனில்

ஹட்டன் நகரில் தேசிய தீபாவளி உற்சவம் நேற்றுறமிகவும்உற்சாகமாக நடைபெற்றது. ஆளும்தரப்பின் முழு அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மும்மத குருமார்கள், புத்தசாசனம்,மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, மத்திய மாகாண ஆளுநர் சரத் அபயகோன், புத்தசாசனம் மத மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க, மத மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முழப்பர், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் சமூக அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி, கிருஷ்ணன் கலைச்செல்வி, அட்டன் டிக்கோயா நகரசபைத்தலைவர், நோர்வூட்

☞ 2

## இந்தியா செய்த வல்வைப் படுகொலைகளுக்கு ரூ. 4.5 பில்லியன் இழப்பீட்டு தரக் கோரிக்கை

### சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பரிந்துரை!



இந்திய அமைதி காக்கும் படையினால் 1989ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை சம்பவத்தில் கொல்லப்பட்ட, காயமடைந்தவர்களுக்காகவும் ஏற்பட்ட சொத்திழப்புகளுக்காகவும் 4.5 பில்லியன் இலங்கை ரூபா இழப்பீட்டினைவழங்கவேண்டும் என சர்வதேச உண்மை மற்றும்நீதிக்கான செயற்றிட்டம் பரிந்துரைத்துள்ளது.

இந்திய அமைதிகாக்கும் படையினரால் நிகழ்த்தப்பட்ட வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின் போதான இழப்புகளுக்கான

☞ 2

## மலையகத்திற்கான தொடருந்துகள் ரத்து

இஹல கோட்டை தொடருந்து நிலையத்திற்கு அருகில் நேற்றுப் பிற்பகல் தொடருந்து ஒன்று தடம் புரண்டதால், மலையக மார்க்கத்தில் பல தொடருந்து சேவைகள் இன்று இரத்து செய்யப்பட்டுள்ளதாக தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகாலை 5.55 - கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்கு (பொடி மெனிகே),

காலை 7.00 - கொழும்பு கோட்டை யிலிருந்து கண்டி (நகரங்களுக்கு இடையிலான கடுகதி),

காலை 8.30 - கொழும்பு கோட்டை யிலிருந்து பதுளைக்கு (உடரட்ட மெனிகே),

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே வைத்துத் தாக்கிய விவகாரம்தான். இது ஒரு பெரும் சர்ச்சைக்குரியவிவகாரமாகவிவாதிக்கப்பட்டது. சட்டத்தரணியைத்தாக்கியதுநீதிமன்றத்தையே தாக்கியது என்பதாகச் சட்டத்தரணிகளும், தமது தரப்பில் தாக்கிய கொன்ஸ்டபிளைப் பாதுகாக்க சட்டமா அதிபரின் உதவியை நாடுவோம் என்றும் பொலிஸாருமாக மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

கொழும்பு, மவுண்ட்லவேனியா நீதிமன்ற வளாகத்தில் சில வாரங்களுக்கு முன் நடந்த இந்த அதிர்ச்சியூட்டும் சம்பவம் இன்னும் சட்டத்துறை வட்டாரங்களில் அடங்காத காற்றாகப் பறக்கிறது. நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் குணரத்ன வன்னிநாயக்க மீது பொலிஸ்கொன்ஸ்டபிள் தாக்குதல்நடத்தினார் என்பதே குற்றச்சாட்டு. நீதிமன்ற வளாகத்திலே நேரடியாக சட்டத்தரணி மீது தாக்குதல் நடந்திருப்பது சட்டத்துறை வரலாற்றில் அரிதானது என்பதால், அந்தச் சம்பவம் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. வழக்கறிஞர்கள் சங்கங்கள் பலரும் தங்களது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. 'நீதிமன்றம் பாதுகாப்புக்கான இடமல்லையா?' என்ற கேள்வி எங்கும் எழுந்தது.

இப்போது பிரச்சினை என்னவென்றால், சட்டத்தரணியைத் தாக்கினார் என்று கூறப்படும் பொலிஸ் கான்டபிளுக்காக நீதிமன்றத்தில் முற்பட்டவர் ஆளும்தரப்பைச் சேர்ந்த ஒரு சட்டத்தரணி. அவர் வெலிகமை பிரதேச சபையிலும் என்பிபி உறுப்பினராக இருக்கின்றார். தாக்கிய கொன்ஸ்டபிளுக்கு ஆதரவாக அவர் நீதிமன்றத்தில் முற்பட்டதைத் தொடர்ந்து, மாத்தறை சட்டத்தரணிகள் சங்கத்தில் (பார் கவுன்ஸில்) அவர் வகித்து வந்த நிர்வாகப் பதவியிலிருந்து திடீரென விலகியுள்ளார்.

அவர் நீதிமன்றத்தில் வாதாடியதன் பேரில்தான் தாக்கிய கொன்ஸ்டபிளுக்குப் பிணை கிடைத்தது. இதுவே தாரக்க நானாயக்காரவின் மீது பலரின் கோபத்தை கிளப்பியிருக்கிறது.

சட்டத்தரணி குணரத்ன வண்ணி நாயக்கவுக்கு எதிராக காவலரின் பக்கம் நின்று வழக்காடியதற்காக, மாத்தறை சட்டத்தரணிகள் சங்கத்தில் சிலர் அவருக்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அந்த அழுத்தத்தின் விளைவாகவே சங்கத்தின் நிர்வாகக்குழுவின் பத்திராதிபர் (சி-ஷ்மிலிஷ்) பதவியிலிருந்து தாரக்க நானாயக்கார விலகியுள்ளார்.

உள்ளக தகவல்களின்படி, அவரை சங்க உறுப்புரிமையிலிருந்தும் விலகச் செய்ய முயற்சிகள் நடந்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்காக ஒரு சிறப்பு நிர்வாகக் குழுக் கூட்டமும் நடைபெற்றதாகக் கேள்வி. அந்தக் கூட்டத்திலேயே தாரக்க பத்திராதிபர் பதவியிலிருந்து விலகும் கடிதத்தை வழங்கினார் என்று தெரியவந்துள்ளது.

ஆனால், அவர் முழுமையாக மாத்தறை சட்டத்தரணிகள்சங்கத்திலிருந்துவிலகவில்லை என்பதுமுக்கியம். நிர்வாகக்குழுபதவியிலிருந்து மட்டுமே விலகியுள்ளார். இருந்தாலும் தனது பதவி விலகலுக்கும் சட்டத்தரணி தாக்கப்பட்ட வழக்குக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று தாரக்க கூறுகின்றார். ஆனால் அதை நம்பத்தான் யாரும் இல்லை. தனக்குத் தனக்கென்றால் சுளகு...

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இன, மத வாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோற்கடித்து அநீதியை வென்றது போன்று, அனைவரின் இதயங்களிலும் இருள் நீங்கி ஒளி பரவட்டும் என்ற பிரார்த்தனையை தாங்கி அவர்கள் மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தக் கொண்டாட்டம் தீமைக்கு எதிராக நன்மை வெற்றி பெற்றதை குறிக்கிறது. தற்போதுநம்முன்பாகஉள்ளபெரும்சவாலைப் போன்றே நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் போதைப்பொருள் மற்றும் மறைந்துள்ள குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த ஆளும்தரப்புப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது . அனைவரினதும் வாழும் உரிமையை உறுதி செய்வதும், அதை ஒரு சிறந்த மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உரிமையாக மேம்படுத்துவதும் எங்கள் முயற்சிகளின் முக்கிய நோக்கமாகும்.

அதேபோல், நமது மக்கள் மட்டுமன்றி இந்த நாட்டில் வசிக்கும் மற்றும் வருகை தரும் அனைத்து மக்களின் உடல், மன, பௌதீக மற்றும் உணர்வுகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பிற்காக ஆளும்தரப்பென்ற வகையில் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். அனைத்து மதவாத மற்றும் இனவாத சக்திகளையும் தோற்கடித்து சமூக நீதியை நிலைநாட்டவும், அனைவரும் தங்கள் அனைத்து சிவில், அரசியல் மற்றும் கலாசார உரிமைகளையும் தடையின்றி அனுபவிக்கக்கூடிய, அனைவரின் சுதந்திரமும் கண்ணியமும் பாதுகாக்கப்படும் ஒரு பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்பவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என்பதை இதன் மூலம் வலியுறுத்துகிறேன்.

தீபாவளி உண்மையிலேயே ஒரு ஒளிப் பண்டிகை. தீபாவளியன்று ஒவ்வொரு வீட்டையும் ஒளிரச் செய்யும் விளக்குகளுடன், 'வளமான நாடு - அழகான வாழ்க்கை' தொடர்பிலான இந்த நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற நமது ஒன்றிணைந்து செல்லும் பாதை இன்னும் ஒற்றுமையாக இருக்கட்டும் என்று பிரார்த்தித்து இலங்கையிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து இந்து பக்தர்களுக்கும் அவர்களின் இதயங்களை பிரகாசமாக்கும் மகிழ்ச்சிகரமான தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலாளர், நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும் நகர பிரமுகர்கள், பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், கல்வி சமூகத்தினர் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

காலை 9 மணிக்கு அட்டன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விசேட பூஜைகளுடன் தொடங்கிய நிகழ்வின்போது அதிதிகள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் தேவஸ்தான முன்றலிலிருந்து கலை கலாசார ,பாரம்பரிய நடனங்களுடன் ஊர்வலம் தொடங்கியது. இதன்போது பாடசாலை மாணவர்களின் மும்மதங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் கலாசார நிகழ்வுகள் பிரதான இடத்தை வகித்தன.

ஹட்டன் பிரின்ஸ் மண்டபத்தை ஊர்வலம் வந்தடைந்ததும் தேசிய கொடி மற்றும் நந்தி கொடியேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தேசிய கொடியையும் பிரதி அமைச்சர் பிரதீப் நந்திக் கொடியையும் ஏற்றி வைத்தனர். அதன் பின்னர் பாடசாலை மாணவர்களால் முதலில் தமிழிலும் பின்னர் சிங்கள மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மண்டபத்தில் மங்கல விளக்கேற்றல் நிகழ்வுகள் இடம்பெற்றன. பாடசாலை மாணவர்களின் நடனம், நாட்டிய நாடகம் உட்பட பல கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

தேசிய தீபாவளி உற்சவத்தை முன்னிட்டு ஹட்டன் நகரம் நந்திக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தீபாவளி முதல் நாளன்று நகரின் மத்திய பகுதியில் பெருமளவு மக்கள் பொருட்களை கொள்வனவு செய்ய வருகை தந்திருந்தாலும் தீபாவளி உற்சவ நிகழ்வுகளிலும் ஆர்வமாகக் கலந்துகொண்டிருந்தனர். தேசிய தீபாவளி உற்சவம் தொடர்பில் விசேட நினைவு முத்திரை ஒன்றும் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கட்சி அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டம் என்ன என்ற கேள்வி உள்ளது. பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகள் மட்டுமல்லாமல், அனைத்து கட்சிகளும் அரசியல் நிலப்பரப்பில் மறைந்து போகலாம். இலங்கையில் மட்டுமல்ல, முழு உலகிலும் 'தனிநபரை சார்ந்த அரசியல் உருவாகி வருகிறது. உலகெங்கிலும் கட்சிக் கட்டமைப்புகளை விட, தனிநபர்களின் ஆளுமை மற்றும் செல்வாக்கைச் சுற்றியே அரசியல் முடிவுகள் எடுக்கப்படும் ஒரு காலகட்டம் வரும் என்றார்.

## மலையகத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை9.45-கொழும்புகோட்டையிலிருந்து பதுளைக்கு (கடுகதி),

காலை 10.35 - கொழும்பு கோட்டையிலிருந்துமாத்தளைக்குபயணிக்கும் தொடருந்து சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும், பதுளை, மாத்தளை மற்றும் கண்டியில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பல தொடருந்து சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அதிகாலை 4.50 - மாத்தளையிலிருந்து கொழும்பு கோட்டை

அதிகாலை 5.00 கண்டியிலிருந்து பெலியத்த

காலை 6.15 கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை

காலை 8.30 மணிக்கு பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை

ஆகிய தொடருந்து சேவைகளையும் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், கண்டிக்கும் பதுளைக்கும் இடையிலான ரயில் சேவைகள் வழமைப் போல் இடம்பெறும்.

அதன்படி, நாளை காலை 5.30 மணிக்கு பதுளை தொடருந்து நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் புறப்படும் தொடருந்து கண்டி ரயில் நிலையம் வரை இயக்கப்படவுள்ளது.

## இந்தியா செய்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழப்பீட்டு அறிக்கை வெளியீட்டு நிகழ்வு மற்றும் கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள் அறிக்கையின் நூல் வெளியீட்டு நிகழ்வும் வடமராட்சியில் நேற்று இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பினரால் தயாரிக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை படுகொலைளுக்கான இழப்பீட்டுக் கோரிக்கை அறிக்கையினை வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் அனந்தராஜ் வெளியிட்டு வைத்திருந்தார்.

முன்னதாக வல்வைப் படுகொலை சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவீரர் ஒருவரின் தந்தை சுந்தரலிங்கம் பொதுச்சுடரினை ஏற்றியதை தொடர்ந்து பங்கேற்றிருந்தவர்களும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர். தொடர்ந்து ந.அனந்தராஜ் மலர்தூவி அஞ்சலி செலுத்தியிருந்தார். தொடர்ந்து ஏனையவர்களும் மலரஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து ந.அநந்தராஜ் இழப்புகளுக்கான இழப்பீட்டு அறிக்கையினை வெளியிட்டு வைத்ததுடந் வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள் நூலினையும் வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதற்பிரதியை பருத்தித்துறை நகராட்சி மன்ற தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் பெற்றுக்கொண்டதை தொடர்ந்து அதன் பிரதி மற்றும் இழப்பீட்டு பரிந்துரை அறிக்கை என்பன பங்கேற்றிருந்த பிரதிநிதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இவ் இழப்பீட்டு பரிந்துரை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, உயிர் இழப்பிற்கான இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதற்கு, இலங்கை ஆளும்தரப்பினால் 2022இல் மேற்கொள்ளப்பட்ட முடிவினை உதாரணமாக பின்பற்றி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் உயிர் இழப்பிற்கு 10 மில்லியன் இலங்கை ரூபாய்களை இழப்பீடாக வழங்கியதன் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டு நிலவரத்தின்படி 450 ஆயிரம் இலங்கை ரூபாய்கள் ஆகும். அதனடிப்படையில் வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின் போது கொல்லப்பட்ட 66 பேருக்கும் 29.75 மில்லியன் (29,750,574.00) ரூபா இழப்பீடாக மதிப்பிடப்பட்டுள்ளது. காயமடைந்த 36 பேருக்கான இழப்பீடாக 1.38 மில்லியன் (1,380,025.00) ரூபாவும், அழிக்கப்பட்ட சொத்துகளுக்கான இழப்பீடாக 57.59 மில்லியன் (57,597,068.00) ரூபாய்களுமாக மொத்தமாக 88.72 மில்லியன் (88,727,667.00) ரூபாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த தொகைக்கு 1989 ஒகஸ்ட் முதல் 2025 மே மாதம் வரையான காலத்திற்கான வட்டியாக 4.43 பில்லியன் (4,433,174,088.00) ரூபாய் சேர்த்து 4.5 பில்லியன் (4,521,901,754.00) ரூபாய் தொகையினை இழப்பீடாக வழங்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், தமிழ் அரசுக் கட்சிச் செயலாளர் சுமந்திரன், வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் அனந்தராஜ், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல், சாவகச்சேரி நகராட்சி மன்ற உப தவிசாளர் கிஷோர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ், கரவெட்டி பிரதேச சபை உப தவிசாளர் தயாபரன், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் சந்திரதாஸ், உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம், பருத்தித்துறை வர்த்தகர் சங்க செயலாளர் மயூரன், காணி உரிமைகள் அமைப்பை சேர்ந்த முரளிதரன், வடமராட்சி ஊடக இல்ல தலைவர் மகாலிங்கம் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் பருத்தித்துறை வர்த்தகர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் தயாராக இருக்கிறார் என்பதை அந்தக் கடிதத்தில் சோமரத்தன ராஜபக்ச உறுதிப்படுத்தியிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொலைத் தண்டனைக் கைதியான முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவினால் சிறைச்சாலையில் இருந்து அவரது சட்டத்தரணி ஊடாக வழங்கப்பட்டுள்ள இந்தச் சத்தியக்கடதாசி ஐ.நா மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தில் இயங்கிவரும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் ஆதாரங்கள் சேகரிப்பு அதிகாரிகளிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி குறித்தும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் மீண்டும் சுயாதீன விசாரணை நடத்தக் கோரியும் அதற்குத் தனது முழுமையான சாட்சியத்தைத் தரத் தயார் என்று தனது மனைவி விஜேவிக்ர ஊடாக 09.07.2025 அன்று கடிதமொன்றை அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இழைத்த குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், மனிதப்புதைகுழிகள் மற்றும் அவற்றுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் உள்ளிட்ட சகல உண்மைகளையும் வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறார் என்றும் சோமரத்ன ராஜபக்ச அறிவித்திருந்தார். அதுமாத்திரமன்றி இந்த உண்மைகளை வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாக சத்தியக்கடதாசி வழங்குவதற்கும் அவர் இணங்கியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய சில உண்மைகளையும், எதிர்வருங்காலங்களில் சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக உள்ள விடயங்களையும் உள்ளடக்கி கடந்த 4 ஆம் திகதி சோமரத்ன ராஜபக்ச சிறைச்சாலையில் அவரது சட்டத்தரணி முன்னிலையில் சத்தியக்கடதாசி வழங்கியிருந்தார்.

இந்நிலையில் அச்சத்தியக் கடதாசியின் ஒரு பிரதி கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க்கிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மற்றுமொரு பிரதி கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தில் இயங்கிவரும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர் அரசியலிலும் புதிய ஒளி பிறக்கட்டும்

தீபாவளி, ஒளியின் வெற்றியை இருள்மீது கொண்டாடும் திருநாள். தீமையைக் கடந்து நன்மை நிலைநிறுத்தப்படும் தருணம் என நம் பாரம்பரியம் கற்றுக்கொடுத்துள்ளது. இந்தத் திருநாளின் உண்மையான பொருள், வெறும் பட்டாசு மற்றும் இனிப்புகளில் இல்லை; அது நம்பிக்கையின் மீளுருவாக்கத்தில் இருக்கிறது.

இலங்கையின் தமிழ் மக்களுக்காக, தீபாவளி எப்போதும் ஒரு ஆன்மீகச் சின்னமாக மட்டுமல்ல, ஒரு அரசியல் உவமையாகவும் இருந்து வந்துள்ளது. 'ஒருநாள் நம் வாழ்க்கையிலும் ஒளி பிறக்கும்' என்ற எதிர்பார்ப்பின் திருநாளாக. தீபாவளிக்குத் தீர்வு வரும் என்று நம்பியிருந்து ஏமாற்றப்பட்ட வரலாறும் தமிழர்களுக்கு உண்டு.

### முழுமையடையாத விடியல்

இலங்கையில் நீண்ட அரசியல் வரலாற்றை நோக்கினால், தமிழ் மக்களின் அரசியல் பயணம் ஒரு தொடர்ச்சியான போராட்டமாகவே தெரிகிறது. ஒப்புரவுக்கான குரல்கள் அடிக்கடி ஒடுக்கப்பட்டுள்ளன; சமத்துவ உரிமைகள் தாமதிக்கப்பட்டுள்ளன; அதிகாரப் பகிர்வுக்கான உரையாடல்கள் மீண்டும் மீண்டும் மங்கிவிட்டன.

போருக்குப் பிறகு பதினைந்துக்கும் மேற்பட்ட ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் இன்னும் தற்காலிக ஒப்பந்தங்களிலும், காலதாமதமான வாக்குறுதிகளிலும் சிக்கியிருக்கிறது. இந்த நிழலான அரசியல் நிலைமையில், தீபாவளி கொண்டுவரும் ஒளி என்ற கருத்தே மிகப் பெரும் பொருளுடையது.

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழர் அரசியல் அமைப்புகள் பல ஆண்டுகளாகப் பிரிவினை மற்றும் குறுகிய நலன்களில் சிக்கி உள்ளன. ஒற்றுமை இல்லாத அரசியல் குரல்கள், தமிழர் கோரிக்கைகளை பலவீனப்படுத்தி விட்டன.

ஒரு சமூகமாக, ஒன்றுபட்ட கோரிக்கைகளுடன் ஒரு அரசியல் நிலைப்பாட்டை உருவாக்குவது அவசியம். அதுவே தன்னாட்சி, கல்வி, வேலைவாய்ப்பு, நில உரிமைகள் போன்ற அடிப்படை உரிமைகள் பெறும் பாதையை திறக்கக் கூடியது.

தீபாவளியின் ஒளி நம் வீடுகளை மட்டுமல்ல, நம் அரசியல் சிந்தனைகளையும் ஒளியூட்ட வேண்டும்.

### சிந்தனை மாற்றமே முன்னேற்றம்

இன்றைய இளைஞர்கள் அரசியலுக்குள் நுழையத் தயங்குகின்றனர். அதற்குக் காரணம், அவர்கள் காணும் பழைய அரசியல் நடைமுறை வாக்குறுதி அதிகம், விளைவு குறைவு.

இதை மாற்றுவது இளைஞர்களின் பங்கு. சமூக ஊடகங்களில் குரல் கொடுப்பதைவிட, அரசியல் தீர்மானங்களில் பங்கெடுப்பது தான் உண்மையான மாற்றம். புதிய தலைமுறையின் கல்வி, தொழில்நுட்பம், புதுமை ஆகிய திறன்களை அரசியல் தீர்மானங்களில் இணைக்கும் காலம் இது.

தீபாவளியின் ஒளி போல, இந்த தலைமுறையின் விழிப்புணர்வே நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் புதிய அரசியல் நம்பிக்கையை ஏற்றிடும்.

### சமநிலைக்கான தேவை

இலங்கையின் தேசிய அரசியலில் தமிழர் பிரதிநிதித்துவம் இன்னும் நிழலாகவே உள்ளது. முக்கிய தீர்மானங்கள் சிங்கள அரசியலில் எடுக்கப்படுகின்றன; தமிழ் கோரிக்கைகள் பிந்தைய விவாதங்களாகவே மாறுகின்றன.

இதனை மாற்ற வேண்டுமானால், தமிழ் அரசியல்வாதிகள் இணைந்து செயல்பட்டு, தெளிவான தேசிய தளவமைப்பை உருவாக்க வேண்டும்.

அரசியல் கட்சிகள் தங்களின் உள்ளக வேறுபாடுகளை தாண்டி, ஒரே தேசியக் குறிக்கோளை முன்னிறுத்தினால், தமிழ் மக்கள் மீண்டும் அரசியல் மரியாதையைப் பெற முடியும்.

தீபாவளி நமக்குக் கூறுவது ஒன்றே – இருள் எவ்வளவு ஆழமானதாக இருந்தாலும், ஒரு சிறு தீப்பொறி அதைத் துளைத்துவிடும்.

இன்று தமிழ் மக்களின் அரசியல் நிலைமை சிக்கலானதாக இருந்தாலும், நம்பிக்கையை விட்டுவிடக் கூடாது. சுயநிர்ணய உரிமை, பொருளாதார முன்னேற்றம், சமூக நீதி, கல்வி சீர்திருத்தம் ஆகியவை இன்னும் சாத்தியமானவையே, நாம் ஒன்றுபட்டால்.

மக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதும், அரசியல் ஒளியை மீண்டும் ஏற்றுவதும் இன்றைய தலைமுறையின் கடமையாகும்.

### ஒளி தரும் அரசியல் வேண்டும்

இந்த தீபாவளியில், விளக்குகள் எரியும்போது, ஒவ்வொரு வீடும் ஒரு பிரார்த்தனையைச் சொல்லட்டும் –

'நம் அரசியலில் ஒளி பிறக்கட்டும்.' அரசியல் என்பது அதிகாரத்திற்கான போட்டி அல்ல; மக்களின் நலனுக்கான பணிவாக இருக்க வேண்டும்.

தமிழர் அரசியல், பழைய கோபங்களையும் பழிவாங்கல்களையும் தாண்டி, புதிய சிந்தனை மற்றும் நடைமுறையின் பாதை நோக்கிச் செல்ல வேண்டும்.

இவ்வாண்டு தீபாவளி, வெறும் பண்டிகை அல்ல –

தமிழர் அரசியலில் ஒளி பிறக்கட்டும் என்ற தேசிய பிரார்த்தனையாக இருக்கட்டும்.

## வடக்கு ஆளுநரின் தீபாவளி வாழ்த்து



ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நம்பிக்கையும் சந்தோஷமும் ஒளி வீசட்டும் என்று தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஒளியின் திருநாளாகிய தீபாவளி, இருளை அகற்றி ஒளியைப் பரப்பும் நல்வழியைக் குறிக்கின்றது. தீமையை வீழ்த்தி நன்மை வெற்றிபெறும் நினைவூட்டலாகவும், அன்பு, ஒற்றுமை மற்றும் அமைதி நிலவும் சமூகத்தை உருவாக்கும் ஊக்கமாகவும் இந்தப் பண்டிகை விளங்குகிறது.

நம் மனத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் இருளை-அறியாமை - பொறா மை - தீமை அகற்றி ஒளியை அறிவு - அன்பு - நம்பிக்கை - பரப்பும் திருநாளாகும். இந்த இனிய நாளில், ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நம்பிக்கையும் சந்தோஷமும் ஒளி வீசட்டும்.

வடக்கு மாகாண மக்களுக்கு நான் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நாளின் ஒளி அனைவரின் இதயங்களிலும் நல்வாழ்வையும் செழிப்பையும் நிரப்பட்டும் என்றுள்ளது.

## அமைச்சர் சந்திரசேகரனின் வாழ்த்து



ஊழல்வாதிகள், கொள்ளையர்கள், பாதாளக்குழுவினர், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என தீங்கு விளைவிக்கக்கூடிய நரகாசூரர்கள் நம் மத்தியில் இன்னும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றனர். இவர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுபுள்ளி வைப்பதற்காக மக்கள் எடுத்த அவதாரமே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பாகும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அநீதி இருள் விலகி சமூகநீதி வெளிச்சம் பரவ தீபாவளி வழிவகுக்க வேண்டும். அதற்குரிய பணியை நாம் செய்து வருகின்றோம். எமது ஆட்சியில் அநீதிக்கு இடமில்லை. சமூக நீதி என்பதே முதன்மைக்கொள்கையாகும். எனவே, எமது ஆட்சியின் கீழ் நிச்சயம் இருள் நீங்கி மக்கள் வாழ்வில் ஒளி பிறக்கும்.

தீமையை நன்மை வென்றதை நினைவுகூரும் நாளாகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. அது உண்மைதான் கடந்தகாலங்களில் இந்நாட்டை ஆண்டவர்கள் தீமைகளையே பெரிதும் இழைத்துள்ளனர். இதன்காரணமாகவே மக்களின் அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு மலர்ந்துள்ளது.

இந்நன்னாள்நாட்டுமக்களிடையேஒற்றுமைஉணர்வையும்,நல்லெண்ணத்தையும்,சகோதரத்துவத்தையும் பலப்படுத்த வேண்டும். அனைவர் வாழ்விலும் அமைதியையும், நல்லிணக்கத்தையும், வளமையையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரட்டும். அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள் - என்றுள்ளது.

## ஜீவன் தொண்டமானின் வாழ்த்துச் செய்தி



அனைவரின் வாழ்விலும் ஒவ்வொரு தருணமும் வெற்றி, ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சி நிரம்பியதாக மலரட்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அனைவரின்வாழ்விலும்ஒவ்வொருதருணமும்வெற்றி, ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சி நிரம்பியதாக மலரட்டும் என, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது தீபாவளி நல்வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:


தீப ஒளியில் இருள் விலகுவது போல், உங்கள் வாழ்விலும் துன்பம் விலகி இன்பம் நிலைத்திருக்கட்டும். இந்த தீபாவளி பண்டிகை உங்கள் வாழ்வில் புதுமையான ஒளிகளை கொண்டு வந்து, மகிழ்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தட்டும்.

எமது நாட்டை சூழ்ந்துள்ள இருள் அகன்று, நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஒளிமயமான எதிர்காலம் பிறக்க நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தருணம் இதுவாகும். தீபாவளி பண்டிகையானது எம்மிடத்தில் ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஆகையால், எமது மலையக மண்ணின் மறுமலர்ச்சிக்காகவும் நாம் ஒன்றுபட வேண்டும்.

மேலும் நாம், எதைச் செய்தாலும் பாதுகாப்பு என்பது எமக்கு மிக முக்கியமானதாகவும். தீபாவளியை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடுவோம். இல்லாதவர்களுக்கு நம்மிடமுள்ளதை பகிர்ந்து, அவர்களின் முகத்திலும் புன்னகையை மலரச் செய்வோம். நாடெங்கும் அன்பும் அமைதியும் தழைக்கட்டும். வேற்றுமை அகன்று ஒற்றுமை ஓங்கட்டும்.

மகிழ்ச்சியான இந்த தீபாவளி நாளில் அனைவரின் வாழ்விலும் வளமும் நலமும் பெருகட்டும். இறைவன் அனைவருக்கும் ஆரோக்கியம், அமைதி மற்றும் செழிப்பு அருளட்டும். அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்! என தீபத் திருநாளில் வாழ்த்துக்களை பகிர்ந்துக்கொள்கின்றேன் என்றுள்ளது.

## ஆறு திருமுருகனின் வாழ்த்து



இந்தப் பிறவியில் நல்லவற்றை கற்று நல்ல வண்ணம் வாழ்ந்து பிறர் வாழ நல்லன செய்வதே நம் கடனாகும். அதற்குரிய கருணை, இரக்கம், அரவணைப்பு அனைவரிடமும் உருவாகவேண்டும் என்று செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்து மக்களின் இனிய பண்டிகைகளில் ஒன்று தீபாவளி. நரகாசுரன் என்ற அசுரன் அழிக்கப்பட்டு எல்லோரும் இன்புற்று வாழ கிருஷ்ண பரமாத்மா வழிதந்த நாள் இந்தத் திருநாள் ஆகும். இந்தப் புனித நாளில் சகலரும் ஆலயங்களுக்கும் சென்று வழி பாடு செய்யுங்கள். வீடுகளில் மங்கல விளக்கேற்றி எல்லோரும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று மன்றாடுங்கள். நீதியும் நிலையான தர்மமும் எங்கும் பிர காசிக்க அனைவருக்கும் இதய பூர்வமான தீபாவளி நல் வாழ்த்துகள் உரித்தாகுக. இரக்கம், அரவணைப்பு அனைவரிடமும் உருவாக வேண்டும். தீபத் திரு நாளாகிய ஒளியை நோக்கி நல் வழியில் பயணம் செய்வோம்.- என்றுள்ளது


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN LAPTOPS
NALIN Information Technologies Pvt Ltd.
DIWALI MEGA OFFER
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER
MEGA OFFER
hp
3 years warranty Windows 11
ASUS
3 years warranty Windows 11
M365
msi
DELL
1 years warranty Windows 11
Lenovo
2 years warranty
Windows 11
2 years warranty
STARTING PRICE -RS: 137,000/=
Island wide free delivery
Installment Payment Allowed
BOC COMMERCIAL BANK HNB VISA MasterCard
Terms & Conditions Apply
hp DELL ASUS Lenovo msi
Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610

# இந்துக் குருமார் அமைப்பின் வாழ்த்து

ஒவ்வொருவரது வாழ்விலும் இன்பமுண்டாகட்டும். ஒவ்வொருவரும் வாழ்வில் வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ வேண்டும் என்று இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் வைத்தீஸ்வரக் குருக்கள் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அந்த முதல் சக்தியே, ஒளியே பரமாத்மா என்கிறோம். அதனால் ஒளி பெறும் மற்ற விளக்குகள் ஜீவாத்மாக்கள் என பார்க்கிறோம். ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் பரம்பொருளே ஆதார ஒளியாகும். இதை உணர்த்தும் வகையில் தான் தீபாவளி பண்டிகை காணப்படுகிறது.

இதனை ஒத்த வகையில் குடும்பம் என்றாலும் சரி சமூகம் சார்ந்த நிலையிலும் சரி தேசம் சார்ந்த நிலையிலும் சரி முதல் ஒளி, முதல் சக்தி சிறப்புடன் அமைய வேண்டும்.

எமது தேசத்தில், குறிப்பாக தமிழ் மக்கள் கடந்து வந்த தடம் மிகவும் கடினமானது. தற்காலம்கூட இக்கடினகாலம் வேறு வகையில் தொடர்கிறது.

குறிப்பாக ஒரு மனிதனை பூரணமாக்குவது கல்வி. இக் கல்வி நிலையில் முன்னைய காலத்தினைவிட பின்தங்கிய நிலையில் உள்ளோம். இதுபோலவே பல்வேறு நிலைகளில் நாம் காணப்படுகிறோம். இந்த நிலை மாற வேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இனிவரும் காலங்களில் ஒவ்வொருவரது வாழ்விலும் இன்பமுண்டாகட்டும். ஒவ்வொருவரும் வாழ்வில் வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ வேண்டும் என அன்பேஉருவானபரம்பொருளின்பாதம்பணிந்துபிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம் என்றுள்ளது.

# முன்னாள் எம்.பி. ராமேஸ்வரனின் வாழ்த்து



தீபாவளி பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்படும் இந்த இனிய வேளையில், இலங்கையில் வாழும் என் சக இந்துக்களுடன்எனதுஇதயம்கனிந்ததீபாவளிவாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கைதொழிலாளர்காங்கிரஸின்தவிசாளரும்நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தீப திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமஸோமாஜ்யோதிர்க்கமயமருத்யோர்மாஅம்ருதம்கமய என்னும் வேத வாக்கிற்கிணங்க, இருளிலிருந்து பேரின்பப் பேரொளிக்கு அழைத்துச்செல்லும்நாளே தீபாவளி தினமாகும். தனது கொடுஞ்செயல்களால் மக்களை பெருந்துன்பத்துக்கு ஆளாக்கிய கொடிய அரக்கனான நரகாசுரனை திருமால் அழித்ததினமேதீபாவளிபண்டிகையாககொண்டாடப்படுகிறது.

இறக்கும் தருவாயில் இருந்த நரகாசுரன், 'நான் மறைந்த இந்த நாள் மக்கள் மனதில் நிற்கவேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும், மக்களும், இந்த நாளை இனிப்பு வழங்கி ,வெடி வெடித்து கொண்டாட வேண்டும்' என இறைவனிடம் வேண்டிக் கொண்டதற்கு இணங்க தீபாவளி கொண்டாடப்படுகின்றது எனவும் ஐதீகம் மேலும் கூறுகின்றது. மறம் வீழ்ந்து, அறம் வென்ற நாளாகவும், தீமைகள் அழிந்து நன்மைகள் பெருகிடும் நன்னாளாகவும் தீபாவளி திருநாள் விளங்குகிறது.

தீபத் திருநாளன்று, மக்கள் அதிகாலை எண்ணெய்க் குளியல் முடித்து, புத்தம் புதிய ஆடைகளை அணிந்து, தீபாவளி என்ற சொல்லின் பொருளுக்கேற்ப இல்லங்களில் வரிசையாக தீப விளக்கேற்றி, தங்கள் வாழ்வு சிறக்க கடவுளை வணங்கி, பல வகையான இனிப்புகளையும் பலகாரங்களையும் நண்பர்களோடும் உற வினர்களோடும் பகிர்ந்துண்டு, பட்டாசுகளை வெடித்து தீபாவளி பண்டிகையை மக்கள் உற்றார் உறவினர்களுடன் கோலாகலமாக கொண்டாடுவார்கள்.இதுபோல் உலகெங்கும் வாழும் இந்துக்கள் தீபாவளி திருநாளை கொண்டாடுகின்றனர்.

இவ்வாறான சிறப்பு மிக்க தீபாவளி திருநாளானது, மனிதனுக்குப் பல்வேறு உண்மைகளை உணர்த்தி நிற்கின்றது.மக்கள்மனதில்இருக்கின்றஅகங்காரம்,பொறாமை, தீயஎண்ணம், குரோதம், பழிவாங்கல். போன்றபல்வேறுபட்ட தீயஎண்ணங்கள் நீங்க வேண்டும்.அறியாமை என்ற மாயை அகன்று, அறிவு மிக்கவர்களாக மாற வேண்டும்.இருளிலிருந்து ஒளியை நோக்கி நகர வேண்டும்.பகிர்ந்துண்ணல், பகைமை ஒழித்தல், மற்றையவர் நலம் பேணுதல், வேற்றுமையில் ஒற்றுமை காணுதல், இன, மத , குல , அந்தஸ்து பேதங்களை தவிர்த்தல் என்பன மூலம் தீபாவளித் திருநாள் ஓர் ஒற்றுமைத் தினம் என்பதாகவும் கருதப்படுகின்றது.

நம் அனைவரது வாழ்விலும் துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெருக வேண்டும்.வாழ்நாள்பூராவும்மகிழ்ச்சி பெருக்கெடுத்து ஓட வேண்டும். இந்த தித்திக்கும் தீபாவளித் திருநாளில், மக்கள் அனைவரின் வாழ்விலும் நலமும் வளமும் பெருகட்டும். அறியாமையால் ஏற்படும் இருளை அகற்றி அனைத்துத் துறைகளிலும் வெற்றி, ஒற்றுமை, ஆரோக்கியம் மற்றும் மேம்பாட்டை உருவாக்கட்டும். எனவே இந்த தீபாவளி திருநாள் மலையக மக்கள் அனைவரின் வாழ்விலும் இருளை அகற்றி வளர்ச்சியையும் வெற்றியையும் ஏற்படுத்தட்டும் என்றுள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

# மண்மகிழ மலர்ந்து வா தீபாவளி!

**வண்ண வண்ண மத்தாப்பு**<br>வகை வகையாய் பட்டாசு<br>எண்ண வெண்ண நாவூறும்<br>இனிப்பு நிறை பட்சணங்கள்<br>கண் எதிரே உறவினர்கள்

கல கலப்பைக் கொண்டுவர<br>மண்மகிழ மனம் மகிழ<br>மலர்ந்து வா தீபாவளி

வருங் காலம் தனையெண்ணி<br>மக்கள் மனம் தவிக்கிறது<br>வாடும் நிலை போயகல<br>வந்து நிற்பாய் தீபாளி<br>நாகரிகம் பெருகி நின்று

நற் பழக்கம் ஓடியது<br>நாநிலத்தில் வாழ்க்கை முறை<br>நலன் இழந்து வாடியது

தீதெழுந்து சிறுமை உள்ளே<br>சிக்கும் நிலை ஆகியது<br>தீதகன்று ஒளி பரவ<br>வந்து நிற்பாய் தீபாவளி<br>புத்தாடை மனம் இருக்கு

புதுத் தெம்பு வரவேண்டும்<br>சொத்தான சுற்ற மெலாம்<br>சுகங்காணும் நிலை வேண்டும்<br>நித்தியமாய் வாழ் நாளில்

நிம்மதியும் வர வேண்டும்<br>நீள் சுகத்தை சுமந்தபடி<br>நீ வருவாய் தீபாவளி<br>மனக் கலக்கம் போக்குதற்கு

வழி கொண்டு வந்துவிடு<br>மாசகன்று மருள் அகல<br>வரங் கொண்டு வந்துவிடு<br>மனை எல்லாம் மங்கலங்கள்

மீண்டும் வர வந்துவிடு<br>மனமகிழ விருந்து தர<br>வந்து நிற்பாய் தீபாவளி<br>உள முடைந்து நிற்பாரை<br>உயிர்ப் பூட்ட வந்துவிடு<br>வளம் இழந்து நிற்பாரை<br>நிலை உயர்த்த வந்துவிடு

நிலம் எங்கும் நிம்மதியே

நிலவி விட வந்துவிடு<br>நலன் மிக்க செய்தியுடன்<br>வந்து நிற்பாய் தீபாவளி<br>இறை எண்ணம் எழுச்சிபெற

ஏந்தி வா நற்கருத்தை<br>கறை எண்ணம் கழன்றுவிட<br>காட்டி வா அக்கறையை<br>பிறை சடையான் அருளதனைப்

பெற்று வா தீபாவளி<br>நிறை குடத்தை வைத்துமே<br>நின் வரவைக் காத்திருப்போம் !



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.10.2025இல் வெளியிடப்பெற்றது